**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,
TIRUVANNAMALAI.
OS No.34/2010**

**20.01.2026 வா.சா. 1 சுனந்தாபாய் க/பெ. உகம்ராஜ்சுரானா**

**சத்திய பிரமாணத்தின் பேரில் 2,3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் வழக்கில் 6வது வாதி. எனக்கு தமிழ் படிக்க தெரியும். சுமாராக எழுதத்தெரியும். எனது பிரமாண வாக்குமூலத்தில் சொன்ன விவரங்களை நான் படித்து பார்த்தேன். என்னுடைய தகப்பானார் கிஷன்லால்ஜெயின். என் தகப்பனாரின் முதல் மனைவி பானிபாய் என்றால் சரிதான். கிஷன்லால்ஜெயினுக்கும் பானிபாய்க்கும் பிறந்தவர்தான் இவ்வழக்கின் 1 முதல் 3 வரை உள்ள பிரதிவாதிகள் என்றால் சரிதான். பானிபாயின் மரணத்திற்கு பிறகு கிஷன்லால்ஜெயின் பார்சிபாய் என்பவரை திருமணம் செய்துகொண்டார் என்றால் சரிதான். கிஷன்லால்ஜெயின் மற்றும் பார்சிபாய்க்கு பிறந்தவர்கள் தான் வாதிகள் மற்றும் 4, 5 பிரதிவாதிகள் என்றால் சரிதான். என் தந்தை 21.05.1997 அன்று காலமானார். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.21 ஆன கிஷன்லால்ஜெயினின் வாரிசுசான்றிதழில் சுரேஷ்குமார் என்பவர் பெயர் இடம்பெறவில்லை என்றால் சரிதான். சுரேஷ்குமார் தற்போது உயிருடன் இல்லை. 22.06.2007 ல் சுரேஷ்குமார் காலமானார். இவ்வழக்கில் சுரேஷ்குமாரின் வாரிசுதாரர்கள் யாரையும் சேர்க்கவில்லை. வா.சா.ஆ.21 வாரிசுசான்றிதழ் வாங்கிய காலத்தில் சுரேஷ்குமார் உயிருடன்தான் இருந்தார். என் தகப்பனார் பல சொத்துகளுக்கு உரிமையார் என்பதற்கான ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சில சொத்துகளுக்கு கொடுத்துள்ளேன். அவை எந்த சொத்க்கள் சம்மந்தப்பட்ட ஆவணங்கள் என்று கேட்டால் திருக்கோவிலூர் , அரக்கநல்லூர் கிராமத்தில் உள்ளஆயில் மில், இடக்கல் கிராமத்தில் உள்ள மதுக்கன் கிரானைட், திருவண்ணாமலை – திருக்கோவிலூரில் உள்ள பெட்ரோல் பங்க், ராஜஸ்தான் மாநிலம் ஜத்தாரில் உள்ள சொத்து ஆகியவற்றிற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். திருக்கோவிலூர் , அரக்கநல்லூர் கிராமத்தில் உள்ளஆயில் மில் ஒரு அரசு சார்ந்த நிறுவனம் என்றால் சரிதான். அதைதான் தாவா B அட்டவணை சொத்தாக காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆயில் நிறுவனத்தில் பல பொதுநபர்கள் பங்குகள் வாங்கியுள்ளார்கள் என்றால் சரிதான். அதை பொது நிறுவனமாக தொடங்கி பொதுமக்களிடம் இருந்து பங்குகள் பெறப்பட்டு நிறுவபட்டது என்றால் சரிதான். அந்த ஆயில் மில்லில் கொஞ்சம் காலமாக உமி நீக்குதல் மட்டுமே செய்யப்பட்டு வந்தது என்றால் சரிதான். அந்த நிறுவனத்தின் மற்ற பங்குதாரர்களை நான் வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். அந்த நிறுவனத்தில் என் குடும்பத்தை சேர்ந்தவர்கள் யார் பங்குதாரர்கள் என்றால்

என் தகப்பனார் கிஷன்லால்ஜெயின், என் தாயார் பார்சிபாய், என் அண்ணன் நிர்மல் குமார், என் அண்ணன் மனைவி கிரன்பாய், அண்ணி கமலாதேவி , என் அக்கா பிரகாஷ்பாய், என் தம்பி ரூப்சன் ஆவார்கள். அவர்களுடைய பங்குசான்றுகளை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. ஒவ்வொரு ஆண்டும் அந்த ஆயில் நிறுவனத்தின் பொது குழு கூட்டம் நடைபெறும் என்றால் என் தந்தை மறைவிற்கு பின் நடைபெறவில்லை. என் தந்தை கிஷன்லால் ஜெயின்தான் அதன் மேலாண் இயக்குநராக இருந்தார். அந்நிறுவனத்தின் கடந்த ஆண்டு வருமானவரி சமர்பிக்கப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது. என் தகப்பனார் அந்நிறுவனத்தை மேலாண்மை செய்ததால் அந்நிறுவனம் நஷ்டத்தில்தான் இயங்கிவந்தது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. தாவா B அட்டவணை சொத்தை பொறுத்தவரை இதர பங்குதாரர்களை சேர்க்காததால் அதில் நான் எந்த பாகமும் கேட்க முடியாது என்றால் சரியல்ல. அது அரசு நடத்தும் பொது நிறுவனம் என்பதால் அதன் பங்குகளை குறித்து நான் கம்பெனி சட்டத்தின்படி தீர்ப்பாயத்தில்தான் பரிகாரம் கோரமுடியும் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

தாவா A அட்டவணை சொத்தான திருவண்ணாமலை – திருக்கோவிலூர் சாலையில் உள்ள இந்தியன் ஆயில் பெட்ரோல் பங்க் சம்மந்தமாக நான் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் தகவல்பெற்றுதான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 09.04.2012 தேதியிட்ட அந்த தகவல்தான் வா.சா,ஆ.25 என்றால் சரிதான். அந்த தகவலின்படி அது 3 வது பிரதிவாதி நிர்மல்குமாரின் தனிப்பட்ட நிறுவனம் என்றுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணங்களின் அடிப்படையில் பெட்ரோலியம் டீலர்ஷிப் நிர்மல்குமாரின் பெயரில்தான் உள்ளது என்றால் சரிதான். நிர்மல்குமாருக்கு 1974 ல் திருமணம் ஆனது என்றால் சரிதான். 1975 ல் நிர்மல்குமார் தனிக்குடும்பம் சென்றார் என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. தாவா A அட்டவணை சொத்தை என் தகப்பனார் என் அண்ணன் நிர்மல் குமார் பெயரில் எடுத்து நடத்திவந்தார் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. என் தந்தைக்கும் அந்த நிறுவனத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

தாவா A அட்டவணை சொத்து கிஷன்லால்ஜெயின் பெயரில் இல்லை என்றால் சரிதான். அது நிர்மல் என்டர்பிரைசஸ் என்ற நிறுவனத்தின் பெயரில் உள்ளது. நிர்மல் என்டர்பிரைசின் தனி நிறுவனர் நிர்மல்குமார் என்றால் சரிதான். தாவா B அட்டவணை சொத்து கிஷன்லால்ஜெயின் பெயரில் இல்லை என்றால் சரிதான். அது ஆயில்மில் பெயரிலேயே உள்ளது. தாவா B அட்டவணை சொத்து பொது நிறுவனத்தின் பெயரில்தான் உள்ளது என்றால் சரிதான். தாவா A அட்டவணை சொத்தை பொறுத்தவரை நிர்மல்குமார் தான்

தனி உரிமையாளர் என்பதால் அதில்நான் எந்த பாகமும் கேட்க முடியாது என்றால் சரியல்ல.

தாவா C அட்டவணை சொத்தான ராஜஸ்தானில் உள்ளது ஒரு காலிமனை என்றால் அதில் இரண்டு வீடும் மற்றும் ஒரு கடையும் உள்ளது. தாவா C அட்டவணை சொத்து நிர்மல்குமார் மைனராக இருந்தபோது அவர் பெயரில் கிரையம் பெற்றது என்றால் சரிதான். அது எந்த வருடம் கிரையம் பெறப்பட்டது என்றால் 1965 அல்லது 1966. தாவா C அட்டவணை சொத்து என் தந்தை கிஷன்லால்ஜெயின் வாங்கி கொடுத்த சொத்து இல்லை என்றும் அவர் தாய் வழி பாட்டனார் என் அண்ணன் பெயரில் வாங்கி கொடுத்த சொத்து என்றால் சரியல்ல. அந்த சொத்து சம்மந்தப்பட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.9 ஆன 24.09.1950 தேதியிட்ட கிரைய ஆவணம்தான் C அட்டவணை சொத்துக்கான ஆவணம். நிர்மல்குமார் மேஜர் ஆன பின்பு தாவா C அட்டவணை சொத்தை தன்னுடைய சொத்தாக அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். அதற்கான பட்டா, வரிவிதிப்பு அவர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்தை நிர்மல் குமார் 1998ல் கிரையம் செய்துவிட்டார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. தாவா C அட்டவணை சொத்தை என் தந்தைதான் கிரையம் பெற்று அவர் இருக்கும்வரை அனுபவித்து வந்தார் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. தாவா C அட்டவணை சொத்தை பொறுத்தவரை நிர்மல்குமார்தான் தனிப்பட்ட உரிமையாளர் என்பதால் அதில் நான் பாகம் கோர இயலாது என்றால் சரியல்ல. என் தந்தை பல நிறுவனங்களை நடத்தி வந்ததாக சொல்லப்படும் ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தந்தை நடத்தி வந்ததாக சொல்லும் மங்காராம் பிசினஸ் புரோடெக்ஸ் மற்றும் ஐஸ் பேக்டரி சம்மந்தமாக எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விழுப்புரம் மாவட்டத்தில் என் தந்தை வட்டி தொழில் செய்ததற்கான எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால சரிதான். என் தந்தை டிரான்ஸ்போர்ட் ஒப்பந்ததாரராக இருந்தார் என்பதை காண்பிக்க எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால சரிதான். என் தந்தை பல நிறுவனங்களில் பல தொழில்கள் செய்து அதில் வந்த வருமானத்தில் தாவா A முதல் C வரை உள்ள சொத்துக்களை வாங்கினார் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. அந்த சொத்துக்களில் வாதிகளுக்கு எந்த உரிமையோ அல்லது அனுபவமோ இல்லை என்று சொன்னால் சரியல்ல.

தாவா D அட்டவணை சொத்தாக காட்டப்பட்டுள்ள மதுக்கர் கிரானைட் நிறுவனத்துக்கும் 3ம் பிரதிவாதிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். தாவா D அட்டவணை சொத்து ஆந்திரா மாநிலத்தை சேர்ந்தவர்களால்

நடத்தப்பட்டு வருகிறது என்றால் என் தம்பி ரூப்சந்த அதை விற்றுவிட்டார். தாவா D அட்டவணை சொத்து எனது பூர்வீக சொத்து இல்லை என்பதால் அதிலும் நான் எந்த பாகமும் கேட்கு முடியாது என்றால் சரியல்ல. தவறான சங்கதிகளின் அடிப்படையில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**8-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு தமிழ் படிக்க தெரியும். சுமாராக எழுதுவேன். என் தகப்பனாரின் பூர்வீகம் ராஜஸ்தான் மாநிலம். என் தந்தை கிஷன்லாலும், என் சகோதரர் ரூப்சந்த் -ம் ஒன்றாக சேர்ந்து தொழில் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. என் தந்தை இறப்பதற்கு முன் என் தந்தை , என் தாயார் மற்றும் என் தம்பி ரூப்சந்த் ஒன்றாக இருந்தார்கள் என்றால் எனக்கு திருமணம் ஆகும்போது அவர்கள் ஒன்றாகத்தான் இருந்தார்கள். எனது திருமணத்தையும், எனது சகோதரிகளின் திருமணத்தையும், என் சகோதரர்களும் சேர்ந்து நடத்தி வைத்தார்கள் என்றால் சரியல்ல. என் தந்தை மட்டும்தான் எங்களுக்கு திருமணம் செய்துவைத்தார். என் தந்தைக்கும் ரூப்சந்திற்கும் இடையே எதாவது பிரச்சனை இருந்ததா என்றால் எனது திருமணம் வரை அவர்களுக்கு எந்த பிரச்சனையும் இல்லை. எனக்கு திருமணம் ஆனபின் என் தந்தையும் ரூப்சந்தும் ஒன்றாகத்தான் குடியிருந்தார்கள் என்றால் என் திருமணத்திற்கு பின் சுமார் 8 , 9 மாதம் ஒன்றாக இருந்தார். அதன்பின் ரூப்சந்த் திருமணம் செய்துகொண்டு வெளியே சென்றுவிட்டார். என் தந்தை 25.01.1997 -ல் இறந்தார் என்றால் சரிதான். என் தந்தை இறப்பிற்கு பின் என் தாயார் பார்சிபாய் என் தம்பி ரூப்சந்துடன்தான் இருந்தார் என்றால் சரியல்ல. என் தந்தையின் இறப்பிற்கு பின் என் தாயார் திருவண்ணாமலை ஐயங்குளத்தெருவில் குடியிருந்தார். நான் சென்னையில் இருந்தேன். என் சகோதரிகளில் ஒருவர் பெங்களூருவிலும், ஒருவர் கும்பகோணத்திலும் குடியிருந்தார். 3ம் பிரதிவாதி நிர்மல் குமார் தனியாகத்தான் இருந்தார். என் தாயார் இறக்கும்வரை என் தம்பி ரூப்சந்துடன்தான் குடியிருந்தார் என்றும் நான் வழக்கிற்காக என் தாயார் தனியாக இருந்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அம்மாவின் கையொப்பம் எனக்கு தெரியும். அவர் இந்தியில்தான் கையொப்பம் செய்வார். என் தயார் தவறான ஆவணங்களில் கையொப்பம் செய்ய மாட்டார். ரூப்சந்திற்கும் என் அம்மாவிற்கும் விரோதம் ஏதும் இல்லை என்று சொன்னால் ரூப்சந்த் திருமணம் செய்துகொண்டு சென்றபிறகு அவ்வப்போது என் தாயாரிடம் வந்து சண்டை போட்டார். என் தாயாருக்கும் ரூப்சந்திற்கும் எந்தவித விரோதமும் என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

தாவா D அட்டவணை சொத்து எடக்கல் கிராமத்தில் உள்ளது. அந்த சொத்தை என் தந்தை 03.10.1986 –ல் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். அந்த சொத்தை நான் நேரடியாக பார்த்ததில்லை. அந்த சொத்தில் தற்போது என்ன உள்ளது என்று எனக்கு நேரடியாக தெரியாது. தாவா D அட்டவணை சொத்தை பொறுத்தவரை என் தந்தை 17.05.1997 தேதியிட்ட உயில் மூலம் என் தம்பி ரூப்சந்திற்கு எழுதிவைத்தார் என்றால் அப்படி எதுவும் அவர் எழுதவில்லை. அந்த உயிலின்படி என் தந்தையின் காலத்திற்கு பிறகு ரூப்சந்த் D அட்டவணை சொத்தை அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. என் தந்தையின் காலத்திற்கு பிறகு ரூப்சந்த் D அட்டவணை சொத்தை அனுபவித்து வந்தார் என்று நன்கு தெரிந்து தற்போது வழக்கிற்காக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தந்தையின் தனிப்பட்ட சொத்தை அவர் உயில் மூலம் என் தம்பிக்கு எழுதிக்கொடுத்ததால் நான் அதில் எந்த உரிமையும் கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. ரூப்சந்த் தன்னுடைய வேலைப்பளு காரணமாக 24.01.2006 தேதியிட்ட ஒரு அதிகாரப்பத்திரத்தை ராஜா என்பவருக்கு எழுதிக்கொடுத்தார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அந்த பொது அதிகாரப்பத்திரம் எழுதப்பட்ட போது என் அம்மா இருந்தார்கள் என்றும், அவர் அதில் ஒரு சாட்சியாக கையொப்பம் செய்தார் என்று சொன்னால் சரியல்ல. அதிகார முகவர் ராஜா D அட்டவணை 2வது இலக்க சொத்தை 25.01.2006 தேதியில் முருகன் என்பவருக்கு கிரையம் கொடுத்தார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அதிகார முகவர் ராஜா அந்த கிரைய தொகையை என் தம்பி ரூப்சந்திடம் கொடுத்துவிட்டார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. 7–ம் பிரதிவாதி முருகனிடம் இருந்து 8ம் பிரதிவாதி நிறுவனம் வில்லங்கத்தை சரிபார்த்து 15.02.2006 ல் கிரையம் பெற்றது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு கிரையம் பெற்றபின்பு 8ம் பிரதிவாதி D அட்டவணை 2ம் இலக்க சொத்தில் ரூ. 3,00,000/– செலவு செய்து கிணறு வெட்டி அனுபவித்து வருகிறார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அதற்கான பட்டாவும் 8ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. 8ம் பிரதிவாதி மேற்படி சொத்தை நல்லெண்ணத்தின்படி கிரையம் பெற்றவர் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. தாவா D அட்டவணை சொத்தின் 2வது இலக்க சொத்தை 8ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்று தெரிந்துகொண்டு நான் 5ம் பிரதிவாதியுடன் சேர்ந்துகொண்டு பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. 8ம் பிரதிவாதி நல்வெண்ணத்தின்பால் கிரையம் பெற்ற சொத்தை அவர் தகைமைநெறி அடிப்படையில் பிரதிவாதி சட்டப்படி அடைய உரிமை உடையவர் என்று சொன்னால் சரியல்ல. எனவே பிரதிவாதிக்கு எதிராக தாவா D

அட்டவணை சொத்தின் 2வது இலக்க சொத்தை பொறுத்தவரை நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.24 ன்படி தகவல் அறியும் சட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற பதில் மட்டும் தாக்கல் செய்துவிட்டு நான் என்ன தகவல் கேட்டேன் என்பதை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.24 வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த கூட்டுபட்டாவில் தாவா D அட்டவணை சொத்தின் 2வது இலக்க சொத்து இடம்பெறவில்லை என்றால் சரிதான்.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.